MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

Workshop Method Performances in the History of Eelam Tamil Theatre History: A Study Focused on the Performances Produced in Batticaloa

T. Gowrieeswaran

Lecturer, Department of Fine Arts, Eastern University, Sri Lanka

Manuscript ID : **MT26A0021**

Volume : **2**

Issue : **1**

Month : **March**

Year : **2022**

Received: 05.01.2022

Revised: 25.01.2022

Accepted: 31.01.2022

Published: 03.02.2022

Pages : 1-15

ABSTRACT:

In the Eelam Tamil Theatre history, the Theatre College, based in the Jaffna Peninsula in the Northern Sri Lanka, commenced its activities in 1978. Workshop is identified as one of the aspects of these activities in addition to the theatre activities that evolved from them. Kulanthai M. Shanmugaligam was the motivating factor for the creation of this new process. The workshop method performances were completely different from the traditional modern play production which prioritized the director and playwright. This process developed through workshop method and identified as educational theatre was practised by M. Shanmugalingam and his students in the leading schools in the Jaffna Peninsula. Having absorbed various new theatre experiences from world-wide theatre activities, it eventually become instrumental in creating new theatre trends such feminist theatre, activism and participatory research activities for Koothu reformulation. Thus the experience sharing and remarks by the participants of the newly created theatre performances indicate the new trends in theatre performance productions. In the background of the realization of the need for researching and compiling such various experiences, remarks and information, this Research Article has been written with “How have performances emerged in Eelam through workshop method?” as the Research Problem and “To study how performances formulated through workshop methods in the Eelam Tamil Theatre history are practised in Batticaloa?” as the objective of the research.

KEYWORDS:
Educational theatre, innovations, drama lessons, theatre activism, practical art, performers

REFERENCES:

1. Sithamparanathan.K, (1994), SamookaMaattathikkanaAranku, First Edition 1994, Second Edtion 1995, Thesiyakalaillakkiyaperaviudanenainthu south Asian Book, Channai
2. ShanmugalingamKulanthai. M., (2003), NaadakaValakku - ArankaKadduraikalum Near Kaanalkalum, First Edition, InnuvilKalaiIllakkiyaVaddam.
3. Jeyasankar,S, (2006)ShannarathuKalviyiyalAranku, First Edition, MoonravathuKann Publication, Batticaloa
4. IthuEmathuPadaippu,(2001), EdduNaadakankalinThoguppu, First Edition, Suriya Pennkal Apiveruthth inelaiyam, Batticaloa
5. Penn (2000) Thoguthi 5, no 4, Suriya Pennkal Apiveruththi nelaiyam, Batticaloa

மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
தொகுதி-2 பதிப்பு-1 மார்ச் 2022 | E-ISSN: 2583-0449

ஈழத்துத் தமிழ் நாடக அரங்க வரலாற்றில் களப்பயிற்சி முறைமை ஆற்றுகைகள்: மட்டக்களப்பில் உருவான ஆற்றுகைகளை மையப்படுத்திய ஆய்வு

து. கௌரீஸ்வரன்,
விரிவுரையாளர், நுண்கலைத்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

கட்டுரைச் சுருக்கம்

ஈழத்துத் தமிழ்நாடக வரலாற்றில் வட இலங்கையில் யாழ் குடாநாட்டைத் தளமாகக் கொண்டு 1978 இலிருந்து இயங்க ஆரம்பித்த நாடக அரங்கக் கல்லூரியின் செயற்பாடுகளிலும் அதனூடாகப் பரிமாணம் பெற்ற நாடக அரங்க நடவடிக்கைகளிலும் அடையாளங்காட்டுங் குறிப்பிடத்தக்க விடயங்களுள் ஒன்றாக களப்பயிற்சியரங்கு காணப்படுகின்றது. இப்புதிய செல்நெறியின் உருவாக்கத்திற்கான உந்து விசையாக குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் திகழ்ந்துள்ளார். நெறியாளரை, நாடகாசிரியரை முதன்மைப்படுத்தும் மரபு ரீதியான நவீன நாடக உருவாக்க முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இந்த களப்பயிற்சி முறைமை ஆற்றுகைகள்; காணப்படுகின்றன. யாழ் குடாநாட்டின் பிரபல்யமான பாடசாலைகளில் ம.சண்முகலிங்கம் அவர்களாலும் அவருடைய மாணவர்களாலும் மேற்கொள்ளப்பட்ட கல்வியியல் அரங்காக அடையாளங் காணப்படும் களப்பயிற்சி முறைமைகளாக இந்தச் செல்நெறி விருத்தி பெற்று பின்னர் அனைத்துலக ரீதியில் உருவாக்கம் பெற்ற வெவ்வேறு புதிய நாடக அரங்கச் செயற்பாடுகளின் அனுபவங்களை உள்வாங்கி தளை நீக்கத்திற்கான அரங்கு, பெண்ணிலைவாத அரங்கச் செயல்வாதம், கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாடு போன்ற குறிப்பிடத்தக்க புதிய அரங்கப் போக்குகளுக்குக் கால்கோளிட்டுள்ளதை அறிய முடிகின்றது. இவ்வாறு புதிதாக முகிழ்த்துள்ள நாடக ஆற்றுகை உருவாக்கப் போக்குகள் பற்றி இதில் பங்கு பற்றியவர்களுடைய அனுபவப் பகிர்வுகள் மற்றும் குறிப்புக்கள் என்பவையே காணப்படுகின்றன. இந்நிலையில் இத்தகைய பல்வேறு அனுபவங்களையும் குறிப்புக்களையும் தகவல்களையும் ஆராய்ந்து தொகுக்க வேண்டியது தேவையாக உணரப்படும் பின்னணியில் களப்பயிற்சி முறைமையூடாக ஈழத்தில் ஆற்றுகைகள்; எவ்வாறு உருவாக்கம் பெற்றுள்ளன என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் களப்பயிற்சி முறைமையில் ஆக்கம்பெற்ற ஆற்றுகைகள் மட்டக்களப்பில் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை ஆய்வின் நோக்கமாகக் கருதி இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

கருச்சொற்கள்

கல்வியியலரங்கு, புதிதளித்தல், நாடகப்பாடம், அரங்கச்செயல்வாதம், பிரயோகக்கலை, ஆற்றுப்படுத்துனர்

முன்னுரை

ஈழத்துத் தமிழர்களின் நாடக அரங்க வரலாறானது இருபதாம் நூற்றாண்டின் அரைப்பகுதியிலிருந்து அனைத்துலக நாடக அரங்க அனுபவங்களுக்குச் சமதையான புதிய கண்டுபிடிப்புக்களுடன் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வளர்ச்சியடைந்து வருவதாக இருக்கின்றது. இந்தவகையில் நடேசையரால் முன்னெடுக்கப்பட்ட நாடகச் செயற்பாடுகள், மத்தியதர வர்க்கத்தினரை இலக்குப் பார்வையாளர்களாகக் கருதி கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நாடக நடவடிக்கைகள், சுதேச மக்களின் வாழ்வியலையும் பண்பாடுகளையும் பேசும் வகையில் உருவாக்கம்பெற்ற பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்களின் நாடக ஆக்கங்கள் அதைத் தொடர்ந்து தேசிய அடையாள உருவாக்கத்தின் தாக்கத்திற்குட்பட்டு பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கூத்துச்செம்மையாக்கல் நடவடிக்கைகள், மரபுவழிக்கூத்தின் ஆற்றுகை நுட்பங்களைப் பயன்படுத்தி சி.மௌனகுரு, தார்சீசியஸ், இளையபத்மநாதன் முதலியோரால் முன்னெடுக்கப்பட்ட ஈழத்திற்கேயான நவீன நாடக ஆக்கங்கள், குழந்தை ம.சண்முகலிங்கம், சி.மௌனகுரு ஆகியோரால் மரபுவழி அரங்கின் ஆற்றுகை உத்திகளைப் பயன்படுத்தி உருவாக்கம்பெற்ற ஈழத்துச் சிறுவர் நாடக முன்னெடுப்புக்கள், க.பாலேந்திரா மற்றும் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட மொழிபெயர்ப்பு மற்றும் தழுவலாக்க நாடகத் தயாரிப்புக்கள், சுஹைர்ஹமீட், தார்சீசியஸ், நா.சுந்தரலிங்கம், இ.சிவானந்தன், பௌசுல்அமீர், குழந்தை ம.சண்முகலிங்கம், மாத்தளைக்கார்த்திகேசு முதலியோரால் ஆக்கம் பெற்ற ஈழத்து நவீன நாடகங்கள், மகாகவி, முருகையன், அம்பி, நீலாவணன் முதலியோரால் ஆக்கம் பெற்ற கவிதை நாடகங்கள் முதலானவை ஈழத்துத்தமிழ் நாடக வரலாற்றின் பல்வேறு செல்நெறிகளை எடுத்தியம்பும் முன்னோடிப் படைப்பாக்கங்களாக எடுத்துக் காட்டப்படுகின்றன. இந்தச் செல்நெறியில் அடையாளங் காணும் விடயம் நாடக எழுத்தாளர், நாடக நெறியாளர், நாடகத் தயாரிப்பாளர் என ஒருவர் அல்லது ஒரு சிலரை மையப்படுத்தியதாக இந்நடவடிக்கைகள் உரிமம் பெற்றுத் திகழ்கின்றமையாகும். இத்தகைய தனிமனித மையப்பட்ட நாடக ஆக்கப் போக்கினைப் பின்வரும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டுகின்றன.

'வித்தியானந்தன் வடிவமீட்பைத் (retrieval of the dramatic form) தொடர்ந்து அந்த ஆற்றுகை வடிவத்தைச் சமகாலச் சமூக இயைப்புடையதாக்குவதற்கு, அரங்கப்படை (battalion of theatre men)யொன்று தொழிற்பட்டது. தாசீசியஸ், நா.சுந்தரலிங்கம் எனத்தொடங்கியது இளையபத்மநாதன், சண்முகலிங்கம் ஆகியோரையும் இணைத்துக் கொண்டது.' (சிதம்பரநாதன்,க., 1994:11)

'நவீன அரங்கத் தன்மைகளை நாடக உலகில் கலையரசர் கொண்டுவந்த போதும் உள்ளடக்கம் பேராசிரியர் கணபதிப்பிள்ளையுடனே நவீன தன்மைகளை (இயற்பண்புவாதம்) உள்வாங்குகிறது. ஈழத்து இலக்கிய உலகில் முன்வைக்கப்பட்ட மண்வாசனை மற்றும் பேச்சுமொழி வீச்சுடன் கணபதிப்பிள்ளையால் முன்வைக்கப்பட்ட போதும் அரங்கில் நவீனத்துவம் (யதார்த்தவாதம்) எழுபதுகளிலேயே இணைந்து கொள்கிறது. நா.சுந்தரலிங்கம், பௌசுல்அமீர், சுபைர்ஹமீட் இதன் முன்னோடிகள். தாசீசியஸ், மௌனகுரு, இளையபத்மநாதன் ஆகியோர் கூத்தினூடாக - நாட்டார் மூலங்களை அடிப்படையாக வைத்து சமூகப்பிரச்சினைகளை பேசமுற்பட குழந்தை சண்முகலிங்கம் பேச்சு மொழியை அடிப்படையாகக் கொண்டு யதார்த்த பின்புலத்தில் நாட்டார் மூலங்களுடன் ஒரு மோடிப்படுத்த அரங்கினூடாக தமிழ் அரங்குக்கு புதிய இரத்தம் பாய்ச்சினார் என்றால் அது மிகையாகாது. சமாந்தரமாக மகாகவி, முருகையன் ஆகியோரது நாடகங்களும் தமிழ் அரங்கை வளம்படுத்தின. என்.கே.ரகுநாதனின் கந்தன் கருணை மற்றும் வி.எம்.குகராஜாவின் படைப்புகளும் குறிப்பிடத்தக்கவை' (சண்முகலிங்கம்குழந்தை, ம.2003: ix)

இதனைத் தொடர்ந்து ஈழத்துத் தமிழ் நாடக அரங்க வரலாற்றில் மேற்கண்ட தனிநபரை மையப்படுத்திய நாடக அரங்க உருவாக்க நிலைமைக்கு மாற்றான புதிய போக்கு அரும்பத் தொடங்கியமை கவனிப்பிற்குரியதாக இருக்கின்றது. அதாவது குழு நிலையில் களப்பயிற்சி முறைமையூடாக நாடகங்களை உருவாக்கிக் கொள்ளும் போக்கு யாழ் குடாநாட்டைத் தளமாகக் கொண்டு மேற்கிளம்பியுள்ளது. இத்தகைய செயற்பாட்டின் மூலவிசையாக குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் விளங்கியுள்ளார். அவரால் தோற்றுவிக்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியும் அதன் செயற்பாடுகளும்; அவரால் யாழ் குடாநாட்டின் பிரபல்யமான பாடசாலைகளிடையே மேற்கொள்ளப்பட்ட கல்வியியல் அரங்க நடவடிக்கைகளும் இந்தப் புதிய போக்கின் ஊற்றுக்களாக இருந்துள்ளன. இதனைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி 'இந்தப் புதிய காலப் பிறப்பு இரண்டு வாய்க்கால்கள் வழியாக வந்தது. ஒன்று நாடக அரங்கக் கல்லூரி பல்வேறு இடங்களில் நடத்திய நாடகப் பட்டறைகள் (Theatre workshops), மற்றது பாடசாலைகளில், பல்கலைக்கழகப் புகுமுக மாணவர்கள் மத்தியில் வளர்த்தெடுத்த கல்வியியல் அரங்கு(educational theatre) (சிதம்பரநாதன்,க., 1994:14) எனக் கூறுகின்றார்.

களப்பயிற்சி அரங்கு

களப்பயிற்சி அரங்கு என்பது பல்வேறு பரிமாணங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதாவது நாடக ஆற்றுகை ஒன்றில் பங்குபற்றும் நபர்களை அந்நாடகத்திற்குரிய விதத்தில் தகவமைக்கும் நோக்குடன் நடத்தப்படுவதாகவும், பங்குபற்றும் நபர்களின் உடல் உள இறுக்கங்களைத் தளர்வடையச் செய்வித்து ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டை மேற்கொள்ளும் வகையிலும், சமூகப் பிரச்சினைகளை உரையாடி அவற்றை விவாதித்து மக்களை அணி திரட்டி முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கும், சமூகநலச் செயற்பாடுகளில் ஈடுபடும் செயற்பாட்டாளர்களை உருவாக்கும் மாற்றுக் கல்வி நடவடிக்கைகளுக்கும், பாடசாலை மாணவர்களிடையே மாற்றுக்கல்வி நடவடிக்கைகளாகவும் எனப் பல்வேறு நோக்கங்களுடன் களப்பயிற்சி அரங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. இவ்வாறு களப்பயிற்சி அரங்கின் செல்நெறியானது பல்வேறு பரிமாணங்களுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பின்புலத்தில் களப்பயிற்சி முறைமை ஆற்றுகைகள் எனுந் தன்மையினையும் கண்டறிய முடிகின்றது.

இந்த வகையில் நாடக அரங்கக் கல்லூரியால் நடத்தப்பட்ட அரங்கக் களப்பயிற்சிகள் பலரும் சேர்ந்து நாடக எழுத்துருவைக் கொண்டு வரும் புதிய போக்கினைத் தோற்றுவித்துள்ளது. சமூகப் பிரச்சினைகள் சார்ந்து களப்பயிற்சிகளில் பங்குபற்றுவோர் முன்வைக்கும் கருத்துக்கள், கலந்துரையாடல்கள் அவை பற்றிய புதிதளித்தல்கள்; ஊடாக நாடகவாக்கம் நடந்தேறும் போக்கு விருத்தியடைந்துள்ளது. இது எவ்வாறு நடந்தேறியது என்பதை ம.சண்முகலிங்கம் அவர்கள் 'கதை, கதைப்பொருள், பாத்திரங்கள், நிகழ்வுகள் என்பன கலந்துரையாடல் மூலம் தீர்மானிக்கப்பட்டு பின்னர் புத்தளிப்பு முறைமையில் வார்த்தைகள், செயல்கள், அசைவுகள், பாத்திரப்படைப்பு என்பவற்றையும் பல ஒத்திகைகள் மூலம் வளர்த்தெடுப்பர். ஒவ்வொரு பகுதியும் புத்தளிப்புச் செய்யப்பட்டுப் பின்னர் அதுபற்றித் தம்முள் கலந்துரையாடி, மீண்டும் செய்து பார்த்துப் பின்னரும் கலந்துரையாடி என்ற படிமுறையில் ஆற்றுகை பாடத்தை உருவாக்கிக் கொள்வர். இதற்கான ஒத்திகைகள் ஏறக்குறைய ஒரு மாதம் வரை மேற்கொள்ளப்படும் (ஜெயசங்கர்,சி.,2006:30) எனக்கூறுகின்றார். இத்தகைய நாடக அரங்கக் களப்பயிற்சிகளில் பங்கு பற்றிப் பயனடைந்த பின்வரும் நாடகத்துறை சார்ந்த நபர்களுடைய குறிப்புக்கள் இதனை மேலும் வெளிக்காட்டி நிற்கின்றன.

'நாடகக் களப்பயிற்சி நடத்துனராகச் சண்ணரது செயற்பாடுகள் தனித்துமானதொரு முறைமையின் பாற்பட்டதாக இருப்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். அரங்கத் திறன்களைப் பயிலும் களங்களாக மட்டும் அவை

இருப்பதில்லை. சமூக நிலைமைகளை விமரிசன நோக்கில் அணுகும் பார்வையையும், அதற்கான அக்கறையுடன் உழைக்கும் மனப்பாங்கையும் வளர்ப்பதாகவும் அது இருக்கும்'. (ஜெயசங்கர், சி., 2006:6)

'மனிதன் பல்வேறு தளைகளால் பிணைக்கப்பட்டுள்ளான், இதனால் அவன் தனது ஆற்றல்களை இழந்துள்ளான். அவனது உடலைக் கட்டுக்களிலிருந்து விடுவிப்பதன் மூலம் அவனது மனக்கட்டுக்களைத் தகர்த்தெறிய முடியும். கட்டுக்களிலிருந்து விடுபட்ட மனிதரிடமே உள்ளுறை ஆற்றல்கள் சுடரும். இதற்கு ஆடல், அரங்க விளையாட்டுக்கள் என்பவை முதன்மையான சிகிச்சைச் சாதனங்கள் என்கிற பேருண்மையைக் கண்டு கொண்ட சோதனைக்களம் அந்தக்களப்பயிற்சியே' (இளங்கோ,செ.2021)

"நாடகம் என்றால் வெறுமனே எழுத்துரு- ஒத்திகை பார்த்தல்- அளிக்கை என்ற ஒற்றைப் பரிமாணத்தை மாற்றியமைத்தன இந்தக் களப்பயிற்சிகள். ஒரு நாடகத் தயாரிப்புக்குள் வருகிற அனைத்து விடையங்களையும் ஒருங்கிணைத்து ஒரு பண்பாடக தானியங்கி ஒழுக்கமாக மாற்றி விடுகிற வேலையை இந்த களப்பயிற்சிகள் செய்து விடுகின்றன"(தேவ அபிரா,2010). 'பல மனிதர்கள் சம்பந்தப்படுகின்ற ஆற்றுகைக் கலையான நாடக ஆற்றுகைக் கலையின் அறிவுத் தொழிற்பாட்டின் சாத்தியப்பாடுகள் வெளிப்படையானவை. தன்னிலைப்பட்டும் குழுநிலைப்பட்டும் கலை உருவாக்கத்திற்கான அறிவு நிலைப்பட்ட உரையாடல்களின் தொகுப்பில் நாடக ஆற்றுகை முழுமை பெறுகிறது' (ஜெயசங்கர்,சி). எனப்பலரும் பங்குபற்றி நாடக ஆற்றுகையினை உருவாக்கும் செயல்முறைமையின் சாதகங்கள் பற்றி அறியக் கிடைக்கிறது.

கலந்துரையாடி நாடகத்தை எழுதுதல்

இங்கு நாடகத்தை எழுதுபவர் ஒருவராக இருந்தாலும் அங்கே அது பலருடைய கருத்துக்கள், கற்பனைகள் என்பவற்றுக்கு எழுத்து வடிவம் கொடுக்கும் செயற்பாடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் 'நாடகம் ஒருவரால் எழுதப்பட்ட போதிலும், அது பேசுகின்ற விடயம் பலராலும் பேசித் தீர்மானிக்கப்பட்டதொரு விடயமாகவே இருக்கும்'(ஜெயசங்கர்,சி,2006:31) என்று கூறுகின்றார். இதற்கான எடுத்துக்காட்டுக்களாக குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களால் கலந்துரையாடலூடாக எழுதப்பட்ட 'மாதொரு பாகம்', 'புழுவாய் மரமாகி', 'தாயுமாய் நாயுமானார்', 'ஆரொடுநோகேன்' முதலிய கல்வியியலரங்க நாடக எழுத்துருக்களைக் காணலாம். இவ்வாறு உருவாகும் நாடகங்கள் பின்னர் நெறியாளர் ஒருவரால் நெறிப்படுத்தப்பட்டு அரங்கேற்றம்

காண்பதாக இருந்துள்ளன. இதற்கான உதாரணங்களாக ம.சண்முகலிங்கத்தினால் கலந்துரையாடல் ஊடாக எழுதப்பட்ட நாடகங்களை க.சிதம்பரநாதன் அவர்கள் நெறிப்படுத்தியுள்ள வரலாற்றினூடாக அறியக்கிடைக்கிறது. இவ்விதமாக ஈழத்துத் தமிழ் நாடக அரங்க வரலாற்றில் யாழ்குடாநாட்டை மையப்படுத்தித் தோற்றம் பெற்ற களப்பயிற்சி முறைமை ஊடாக நாடகத்தை உருவாக்கிக் கொள்வதானது ஈழத்துத் தமிழ் நவீன நாடக மரபின் புதிய போக்காக விளங்குவதுடன், நாடகவாக்கம் தனிமனித மையத்திலிருந்து பலரும் பங்குபற்றும் சமூகமையத் தன்மைக்கு நிலைமாற்றம் பெற்றுள்ளதை எடுத்துக் காட்டுவதாகவுமுள்ளது. இதனைப் பின்வரும் மேற்கோள் வழியாக மேலும் விளங்கிக் கொள்ளலாம். 'சண்ணரது களப்பயிற்சி முறைமையின் தனித்துவத்தை களப்பயிற்சி முறைமைகளும், கூட்டுச் செயற்பாடான எழுத்துருவாக்க முறைமைகளும் ஈழத்தமிழர்களது நவீன அரங்கிற்குப் பிரத்தியேகமானதான சமுதாய அரங்கச் செயற்பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கின்றன.'(ஜெயசங்கர்,சி,2006:7)

களப்பயிற்சிமுறைமையூடான ஆற்றுகை உருவாக்கம்

இதேவேளை மேற்கூறிய களப்பயிற்சி முறைமையூடாக நாடகங்களை உருவாக்கும் ஈழத்துத்தமிழ் நாடகச் செல்நெறியில் இன்னுமொரு புதிய பரிமாணம் ஏற்பட்டுள்ளமையும்; இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாக இருக்கின்றது. அதாவது 'நாடகத்தில் வடிவிலும் பார்க்க அதன் ஆற்றுகை வன்மையே முக்கியமானதாகும்'(சிதம்பரநாதன்,க.,1994:17) என்று வலியுறுத்தி நாடக எழுத்தாக்கத்தில் அக்கறை செலுத்தாத புதிய போக்காக அது காணப்படுகின்றது.'முழு உடலையும் நாடக வெளிப்பாட்டுக்கான சாதனமாகக் கொள்ளல் இசையோடிணைந்தே அசைவுகளைச் சிந்தித்தல், காண்பியங்களைக் (Visuals) குறியீடுகளாக அமைத்தல், எல்லாவற்றுக்கும் மேலாக எண்ணக்கருக்களை நாடகப் பொருளாக்குதல் (Theatre of Concepts: ideas) ஆகியன இந்த அரங்கின் அம்சங்களாகும். இங்கு கருத்துக்கள் காண்பியங்களாக்கப்படுகின்றன. (ideas are visualized) இங்கே நாடகம் என்பது ஆற்றுகை (Performance) ஆகவே காணப்படுகிறது.'(சிதம்பரநாதன்,க., 1994:16-17) எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி இந்தப் போக்குக் குறித்து விளக்கமளித்துள்ளார்.

சுருங்கச் சொன்னால் இது எழுத்துருவற்ற ஆற்றுகை உருவாக்கத்தையே வலியுறுத்துகின்றது எனலாம். இதனை உறுதிப்படுத்தும் வகையில் பின்வரும் மேற்கோள் காணப்படுகின்றது. 'அனைத்துப் பயிற்சிகளும் நாடகத் தயாரிப்பொன்றை நோக்கியதாக இருந்தன. அவற்றிற்கு ஊடாகச் சில பாத்திரப் படிமங்கள் உருவாக்கப்பட்டன. இதிலுள்ள சுவாரசியம் என்னவென்றால். இந்த ஆற்றுகைக்கென எழுத்துரு எதுவும் இருக்கவில்லை. ஆற்றுகையில் படிமங்கள் எவ்வாறு வளர்ந்து

செல்லும் என்பதை அந்தந்த ஆற்றுகைகளின் போக்கே தீர்மானிக்கும் வகையில் நெகிழ்வுத் தன்மையுடன் இருந்தன. ஆற்றுவோருக்கும் பார்ப்போருக்கும் இடையிலான ஊடாட்டமே ஆற்றுகையின் முழுமையைத் தீர்மானிக்கும். பாத்திரப்படிமங்களின் பிரதான செயல்களும் பாத்திரப்பண்புகளும் முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டன.'(இளங்கோ,செ,2021:15) இதற்கான எடுத்துக்காட்டாக க.சிதம்பரநாதனுடைய அரங்கச் செயற்பாடுகளை அடையாளங்காண முடிகின்றது. இவருடைய அரங்கச் செயற்பாடுகளூடாக உருவான 'மாற்றம்', 'உயிர்த்த மனிதர் கூத்து' என்ற ஆற்றுகைகள் இதற்கான உதாரணங்களாக உள்ளன.

ஆற்றுகையும், எழுத்துருவாக்கமும்

அடுத்து களப்பயிற்சியில் மேற்கொள்ளப்படும் புதிதளித்தல்கள் அது தொடர்பான கலந்துரையாடல்கள் ஊடாக நாடக ஆற்றுகையினையும் நாடக எழுத்துருவாக்கத்தையும் வளர்த்துச் செல்லும் இன்னுமொரு போக்கும் வளர்ச்சியடைந்துள்ளதனை விளங்கிக்கொள்ள முடிகின்றது. இங்கு ஆற்றுகை முழுமை பெறும் போதே நாடக எழுத்துருவும் முழுமை பெறுவதாக இருக்கும். இதற்கான உதாரணமாக சி.ஜெயசங்கர், ம.நிலாந்தன் ஆகியோரால் களப்பயிற்சியூடாக ஆக்கப்பட்ட 'அகதிகளின்கதை', 'யுத்தத்தின் நாட்கள்' முதலிய நாடகங்கள் விளங்குகின்றன. இங்கு ஜெயரஞ்சினி இராசதுரை கூறும் மேற்கோள் இந்தப்போக்கினை மேலும் விளக்குவதாக இருக்கின்றது. 'கூர்'(1995) எனும் பெண்ணிலைவாத நாடகம் யாழ்ப்பாணத்தில் ஒரு சில பகுதிகளில் ஆற்றுகை செய்யப்பட்டது. இந்நாடகம் நடன மொழியையும், இசை மொழியினையும் இணைத்துத் தமது மையக் கருவினை எடுத்து விளக்கி நின்றது. கலந்துரையாடல் முறை மூலமே தயாரிப்புப் படிமுறை வளர்த்தெடுக்கப்பட்டது. படைப்பின் முடிவில்தான் முழுமை பெற்ற நாடக பாடம் வந்து சேர்ந்தது. (ஜெயரஞ்சினி.,இ, 2003:207)

மேற்படி விபரிப்பினூடாக களப்பயிற்சி மூலமாக நாடகங்களை உருவாக்கும் செல்நெறியில் பின்வரும் மூன்று போக்குகள் அடையாளங் காணத்தக்கதாக உள்ளன

1. கலந்துரையாடி கூட்டுப்படைப்பாக்கமாக நாடகத்தை எழுதும் முறை
2. ஆற்றுகையினை பிரதானப்படுத்தி உருவாக்கும் முறை
3. ஆற்றுகை முழுமைபெறும் போது நாடக எழுத்துருவையும் முழுமையாக்கும் முறை

ஈழத்து நாடக வரலாற்றிலும் செல்நெறியிலும் மேற்படி போக்குகளினது விளைவுகள் பெறுபேறுகள் தொடர்பாக மேலும் விரிவாக ஆராய வேண்டியது நாடக ஆய்வாளர் முன்னுள்ள பணியாக இருக்கின்றது.

மட்டக்களப்பில் களப்பயிற்சி அரங்க நடவடிக்கைகள்

இந்தப்பின்புலத்தில் மட்டக்களப்பில் களப்பயிற்சியூடாக நாடகங்களை உருவாக்கிக் கொள்ளும் போக்கு எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பது குறித்து ஆராயும் போது 'நிராகரிக்க முடியாதபடி...'(1996), 'பாரம்முறி விளையாட்டு'(1998), 'மட்டுநகர் கண்ணகைகள்'(1998), 'நிசப்த இரைச்சல்'(1998), 'இது எமது படைப்பு'(2000), 'பறப்பிழந்த வண்ணத்துப்பூச்சிகள்'(2000), 'நஞ்சினில் விளையவோ...'(2000), 'ஆண்களின் செயல்வாத வீதி நாடகம்'(2005), 'பெண்களும் மனிதர்கள் என்றுணர...'(2006), 'அன்பை நிறைத்திடுவோம்', 'சமத்துவம் காண...' (2008)முதலிய நாடக ஆற்றுகைகள் இதற்கான குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டுக்களாகக் காணப்படுகின்றன.

இதில் 'நிராகரிக்க முடியாதபடி...', 'பாரம்முறி விளையாட்டு', 'மட்டுநகர் கண்ணகைகள்', 'நிசப்த இரைச்சல்', 'இது எமது படைப்பு' எனும் ஐந்து ஆற்றுகைகளும் மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரால்; முன்னெடுக்கப்பட்ட களப்பயிற்சிகளுடாக உருவாக்கம் பெற்றவையாக இருக்கின்றன. இந்நாடக எழுத்துருக்கள் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தால் 2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'இது எமது படைப்பு' எனும் எட்டு நாடகங்களின் தொகுப்பு நூலினூடாகப் பொது வெளியில் பகிரப்பட்டுள்ளன.

'நிராகரிக்க முடியாதபடி' களப்பயிற்சியில் கலந்துரையாடி எழுதப்பட்ட நாடக வகையைச் சார்ந்ததாக உள்ளது. இந்நாடக உருவாக்கம் குறித்து மேற்படி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 'ஆண்டின் இறுதியில் ஒரு தொடர் நாடகக் களப்பயிற்சியை நடத்த வழிவகுத்தது. பெண்ணிலைவாத செயற்பாடுகளில் ஈடுபாடுடையவரும், அரங்கியலாளருமான சி.ஜெயசங்கரினால் இருபத்தைந்து நாட்கள் தொடர்ந்து இது நடத்தப்பட்டது. வெவ்வேறு கிராமங்களில் இருந்தும் வந்த பெண்களும், ஆண்களும் சுமந்து வந்த சோகக் கதைகளின், இழப்புக்களின் பகிர்களமாயிற்று நாடகப்பயிற்சிக்களம். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரே விதமான துயர்... ஒரேவிதமான கதைகள்... போரின் வடுக்கள்... ஆண்துணை இழந்த பெண்கள் எங்கும், எங்கும்.. இவர்களை ஆறவிடாது தொடர்ந்து வதைக்கும் எமது கலாசார நியாயங்கள். இவற்றைக் கேள்விக்குட்படுத்துவதாய், இச்சம்பவங்கடு வாழ்தலை தொடரக்கூடியதான நம்பிக்கையை ஏற்படுத்துவதாக, அதிலும் அதேசூழலில் உள்ள வெவ்வேறு சமூக அங்கத்தவர்களே துணை நிற்பதாக 'நிராகரிக்க முடியாதபடி' நாடகம் உருப்பெற்றது. நாடகம் வடிவம்பெற்று அரங்கேற்றுவதற்கு முன்னராக 'மன்ரேசா'வில் இதே சூழ்நிலைக்குட்பட்ட மிகவும் இளம் வயதினரான நாற்பது சகோதரிகள் முன்பாக இதை அரங்கேற்றியதும் எல்லோரும் இவ்வாறு சிந்தித்தால் எவ்வளவு நல்லது என்ற அவர்களது ஆதங்கமும் மறக்க முடியாதது. இந்நாடகம் பின்னர் மட்டக்களப்பு

தேவநாயகம் மண்டபம் செங்கலடி மத்திய மகா வித்தியாலயம் போன்ற வெவ்வேறு இடங்களில் மேடையேற்றப்பட்டது.' (இது எமது படைப்பு, 2001:ii)

'பாரம்முறி விளையாட்டு', 'மட்டுநகர் கண்ணகைகள்', 'நிசப்த இரைச்சல்' எனும் மூன்று ஆற்றுகைகளும் தமிழகத்தைச் சேர்ந்த அரங்கியலாளரான மங்கை என்பவரின் களப்பயிற்சியினூடாக ஆற்றுகை முழுமைபெறும் போது நாடக எழுத்துருவை முழுமையாக்கும் தன்மையில் உருவாக்கம் பெற்றுள்ளது. இதனைப் பின்வரும் மேற்கோள் வழியாக அறிய முடிகின்றது. 'பெண்ணிலைவாத அரங்கியலாளரான மங்கை தமிழ் நாட்டிலிருந்து வந்து எமக்காக நடாத்திய ஐந்து நாள் பயிற்சிக் களத்தில் மூன்று அளிக்கைகள் உருவாகின. ஒரு குடும்பத்தைச் சுமப்பதில் சமபங்கெடுக்காத காரணத்தால் அதுவே சுமையாகிப் போவதும், இப்பாரத்தை முறித்து வாழ்வை இலகுவாக்க பெண்களும் ஆண்களுமாகச் சுமையைப் பகிர்வது பற்றி 'பாரமுறி விளையாட்டு' பேசிற்று. இது மட்டக்களப்பு மாவட்டத்தின் பாரம்பரிய சடங்கான கொம்புமுறி விளையாட்டு மெட்டுக்களால் ஆக்கப்பட்டது. 'திருகோணமலை, வடக்குகிழக்கு மாகாண சபையின் இலக்கியவிழா தொடக்கம் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டதும், பலரதும் மனதைக் கவர்ந்ததுமாக அமைந்தது 'மட்டுநகர் கண்ணகைகள்' ஆகும்.' 'நிசப்த இரைச்சல்', எங்களுள் வடுக்களாகக்கிடந்த பெண்களுக்கெதிரான வன்முறைகளைச் சாட்சியாக வைத்து தயாரிக்கப்பட்டது. பெண்களுக்கெதிரான நான்கு வகையான வன்முறைகளை அதற்கு உட்பட்டவரோ, அல்லது வன்முறை நடத்துதற்கு சாட்சியானவர்களோ நேரடியாகக் கூறுவதாக, ஒரு விவரண அரங்காக அமைந்தது.'(இது எமது படைப்பு, 2001:iii - பக் i)

'இது எமது படைப்பு' ஒரு வீதி நாடகமாக ஆக்கப்பட்டுள்ளது. இதுவும் ஆற்றுகை முழுமைபெறும் போது நாடக எழுத்துருவை முழுமையாக்கும் தன்மையிலேயே உருவாகியுள்ளது. 'முழுவதும் பெண்களைக் கொண்ட குழுவின் முதலாவது வீதிநாடகச் செயற்பாடு இதுவாக உள்ளது' (பெண்,2000:74) 'சி.ஜெயசங்கரை வழங்குனராகக் (வளவாளர்) கொண்டு நடத்தப்பட்ட வீதி நாடகக் களப்பயிற்சியில் தோற்றம் பெற்றதே 'இது எமது படைப்பு'. இது பெண்களது ஆளுமைகளை அடக்கும் ஆணாதிக்கக் கருத்தியலை ஆராயும் வீதிநாடகம். இது மட்டக்களப்பின் முக்கியமான மக்கள் கூடும் இடங்களான காந்தி சதுக்கம், அரசடிச்சந்தி மற்றும் அக்கரைப்பற்று, திருகோணமலை போன்ற இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது.'(இது எமது படைப்பு, 2001: பக் i,ii) 'பறப்பிழந்த வண்ணத்துப் பூச்சிகள்' எனும் நாடகம் கிழக்குப்பல்கலைக்கழக அனைத்துபீட பட்டதாரி மாணவர்களுடனான களப்பயிற்சியில் உருவாக்கம் பெற்றுள்ளது. 'சி.ஜெயசங்கரின் இணைப்பாக்கத்தில், களப்பயிற்சி அரங்கின் ஊடாக புதிதளித்தல் முறையில் ஆங்கிலத்திலும், தமிழிலும் உருவாக்கப்பட்ட இந்நாடகத்தின் ஆங்கில எழுத்துப் பனுவலை எஸ்.எம்.பீலிக்ஸ் அவர்களும், தமிழ் எழுத்துப் பனுவலை

வி.கௌரிபாலனும் எழுத்துருவாக்கம் செய்திருந்தார்கள். இந்தநாடக அரங்க உருவாக்கத்தில் கிழக்குப்பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் பங்கேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 'நீ அழைத்ததாக........ ஒரு ஞாபகம்........' என்ற வி.கௌரிபாலனின் சிறுகதையே இந்நாடகத்தின் மூலமாக அமைகிறது. கிழக்குப்பல்கலைக்கழக ஆங்கில மன்றத்தால் அனைத்துப் பல்கலைக்கழக நாடக விழாவில், 2000 ஆம் ஆண்டு கொழும்பில் Flightless Butterflies என்ற பெயரில் ஆங்கிலத்தில் அரங்கேற்றப்பட்டு, மிகச்சிறந்த விமர்சனங்களைப் பெற்றுக் கொண்டது இந்நாடகம்.' (ஜெயசங்கர்.சி,2020)

'நஞ்சினில் விளையவோ...' எனும் தெருவெளி நாடகமானது 2000ஆம் ஆண்டு மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ அமைப்பில் இயங்கிய இளைஞர் யுவதிகளுடனான களப்பயிற்சியில் உருவான நாடகமாகும். இந்நாடகம் தொடர்பாக எழுதப்பட்டுள்ள விமர்சனம் ஒன்றில் 'மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிபர் சங்கம் 02.02.00 முதல் 06.02.00 வரை ஒழுங்கு செய்திருந்த வீதி நாடக வதிவிடக் களப்பயிற்சிக்காக சி.ஜெயசங்கரினால் எழுதி, இயக்கி மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களைக் கொண்டு சத்துருக்கொண்டானில் ஆறு தடவைகள் அளிக்கை செய்யப்பட்டு செம்மைப்படுத்தப்பட்டு, 02.03.2000 ஞாயிறு பி.ப 4:30 மணியளவில் வை.எம்.சீ.ஏ சிறுவர் பூங்காவில் மேடையேற்றப்பட்ட 'நஞ்சினில் விளையவோ' என்ற வீதி நாடகத்தின் முடிவில்தான் மழை வெள்ளம்போல் மகிழ்ச்சிப் பிரவாகம் ஓடியது' (சரிநிகர், 2000, ஏப்பிரல்) என்ற பதிவினைக் காணமுடிகின்றது.

'ஆண்களின் செயல்வாத வீதி நாடகம்' எனும் ஆற்றுகை 2004, 2005 காலப்பகுதியில் மட்டக்களப்பில் சீலாமுனை, கருவேப்பங்கேணி எனும் ஊர்களைத் தளமாகக் கொண்டு சமூகத்தின் பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த இளைஞர் யுவதிகளிடையே மேற்கொள்ளப்பட்ட பால்நிலைச் சமத்துவத்திற்கான களப்பயிற்சியூடாக உருவாக்கம்பெற்ற ஒரு தெருவெளி அரங்க ஆற்றுகையாகும். இதன் ஆற்றுகை கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பால்நிலைச் சமத்துவத்திற்கான விழிப்புணர்வுப் பிரச்சாரச் செயற்பாடுகளில் நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான தொகுப்பு நூல் ஒன்று குறித்த குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலில் '2004 ஒக்டோபர் மூன்றாவதுகண் நண்பர்கள், சீலாமுனை கலைக்கழக நண்பர்கள் மற்றும் கருவேப்பங்கேணி கலை நண்பர்களை இணைத்துக் கொண்டு வாசுகி அவர்களால் வன்முறைகள் தொடர்பான கலந்துரையாடல் சீலாமுனையில் ஆரம்பிக்கப்பட்டது. 2004 நவம்பர் - திசம்பர் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடலானது பயிற்சிப்பட்டறையாக மாறி அதன் மூலம் பங்குபற்றுனர்களால் உருவாக்கப்பட்ட ஆக்கங்களை வைத்துக்கொண்டு திரு.சி.ஜெயசங்கர் அவர்களால் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான

ஆண்களின் செயல்வாத வீதிநாடகம் உருவாக்கப்பட்டது. 2005 மார்ச் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாத வீதிநாடக ஆற்றுகையானது மார்ச்8 பெண்கள் தினத்தை முன்னிட்டு சீலாமுனைக் கிராமத்தில் முதல் முறையாக பிரத்தியேக அழைப்பாளர்கள் முன்னிலையில் ஆற்றுகை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இச்செயல்வாதம் சம்பந்தமான கலந்துரையாடலும் ஆரம்பிக்கப்பட்டது.' (கருணேந்திரா, ஜோ.கௌரீஸ்வரன், து.நிர்மலவாசன், சு.ஜெயசங்கர், சி.கமலாவாசுகி 2014:39-40) 'பெண்களும் மனிதர்கள் என்றுணர...' எனும் நாடகம் 2006ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா பெண்கள் பாடசாலையில் தரம் 10 வகுப்பில் கல்வி கற்ற மாணவர்களுடனான களப்பயிற்சியின் ஊடாக உருவாக்கம் பெற்ற நாடகமாகும். குறித்த வருடத்தில் நடைபெற்ற தமிழ்மொழித் தினத்திற்கான நாடகப் போட்டியை வாய்ப்பாகப் பயன்படுத்தி பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய திருமதி இந்திராணி புஸ்பராஜா அவர்களின் அழைப்பிற்கிணங்க மூன்றாவதுகண் நண்பர்களின் சார்பில் நாடகத்துறையினைச் சார்ந்த து.கௌரீஸ்வரன், த.விவேகானந்தராஜா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட களப்பயிற்சியினூடாக இந்நாடகம் உருவாக்கப்பட்டிருந்தது. இந்நாடக உருவாக்கத்திற்கான மேற்பார்வையாளராக சி.ஜெயசங்கர் செயலாற்றினார். பாடசாலையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்பித்த ஆசிரியர்களான திருமதி. சுகந்திமலர்ச்செல்வன், திருமதி. நிமலினிபாலசேகர் ஆகியோர் களப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்கள். 'இந்த பெண்களும் மனிதர்கள் என்றுணர என்னும் நாடகமானது எமது பாடசாலையின் அதிபர் திருமதி இ.புஸ்பராஜா அம்மணி அவர்களினதும் முன்றாவதுகண் இணைப்பாளர் திரு சி.ஜெயசங்கர் அவர்களினதும், எமது பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரினதும் முன்னிலையில் ஒத்திகை பார்க்கப்பட்டு, 2006ம் ஆண்டு தமிழ்த்தின விழாவிற்கான போட்டிக்காக மட்டக்களப்பு இந்துக் கல்லாரி மண்டபத்தில் அரங்கேறியது.' (கௌரீஸ்வரன்.து, விவேகாந்தராஜா.த,2019) இந்நாடகமானது குறித்த ஆண்டில் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக மண்டபத்தில் நடைபெற்ற சண்ணரது கல்வியியல் அரங்கு நூல்வெளியீட்டு விழாவிலும் அளிக்கை செய்யப்பட்டு பலரதும் பாராட்டைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

'அன்பை நிறைத்திடுவோம்', 'சமத்துவம் காண...'(2008) எனும் இரு நாடகங்களும் முறையே மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் கெயார் சர்வதேசம் எனும் அனைத்துலக அரசசார்பற்ற நிறுவனத்தின் பால்நிலைச் சமத்துவத்திற்கான செயற்றிட்டத்தில் செயலாற்றிய உள்ளூர்த் தொண்டர்களுடனான கலையாக்கக் களப்பயிற்சியினூடாக தெருவெளி அரங்க ஆற்றுகையாக உருவாக்கம் பெற்று இவ்விரு மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது. இதற்கான

களப்பயிற்சி வளவாளர்களாக மூன்றாவதுகண் நண்பர்கள் குழுவினைச் சேர்ந்த சி.ஜெயசங்கர், (மட்டக்களப்பில்) து.கௌரீஸ்வரன், த.விவேகானந்தராஜா (திருகோணமலையில்) ஆகியோர் செயலாற்றியிருந்தார்கள்.

நாடவாக்கத்தில் பங்குபற்றியோரின் அனுபவங்கள்

மேற்படி நாடகவாக்கங்களில் பங்கெடுத்த நபர்கள் இந்த நாடகங்களைத் தாங்கள் எவ்வாறு குழுவாகச் சேர்ந்து உருவாக்கினோம் என்பதையும் இதில் தங்களுடைய பங்களிப்பு எவ்வாறு இருந்துள்ளது என்பதையும் மிகுந்த ஆர்வத்துடன் வெளிப்படுத்தியுள்ளமையினைக் காண முடிகின்றது.

இது எமது படைப்பு எனும் வீதி நாடக உருவாக்கத்திற்கான களப்பயிற்சியில் பங்குபற்றிய கலைஞர்கள் கூறுவதாவது 'ஆரம்பத்தில் ஒரு கலந்துரையாடலாகவே நாடகச் செயல்முறை ஆரம்பிக்கப்பட்டது', 'ஐந்து நாட்கள் பயிற்சி வகுப்பும் அதில் இடம்பெற்ற கலந்துரையாடல்களும் அன்றாடம் சமூகத்தில் நிலவிக்கொண்டு வருகின்ற பெண்கள் பற்றிய பார்வைகளை நாடகம் மூலம் சித்தரிக்க உதவியாக அமைந்தது. இந்நாடகம் அமைய காரணம் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய கலாசார குழுவினரின் கூட்டு முயற்சி என்றே கூற வேண்டும். அத்துடன் வழங்குனர் எமக்கு அளித்த ஊக்கமும், விடய ரீதியான உரையாடல்களும், ஆற்றுகைக்கான நுணுக்கங்களும் நாடகத்தை உருவாக்குவதற்கு இலகுவாக அமைந்தது.' 'இணைப்பாளர் எமது அனுபவங்களை தனித்தனியே எழுதும்படி கூறினார். பின் அவ்விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. இதிலிருந்து முக்கியமான கருத்துக்களை, விடயங்களை நெறிப்படுத்தினோம்.', 'பாத்திரப்படைப்பிற்கு ஏற்ப அனைவரையும் தாம் விரும்பிய வகையில் எழுதுமாறு இணைப்பாளர் கூறினார். அவை பல வடிவங்களில் எழுதப்பட்டது. அவையாவன கவிதை வடிவம், பழமொழிகள், துணுக்குகள், வசனநடை போன்றன' (பெண்,2000:69-74) மேற்குறித்த நாடக உருவாக்கத்திற்கான களப்பயிற்சியின் இலகுபடுத்துனராகச் செயலாற்றியவரின் பதிவாக உள்ள பின்வரும் கூற்று மேற்படி வீதி நாடகம் எவ்வாறு கூட்டுப்படைப்பாக்கமாக உருவானது என்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றது. 'என்ன விடயங்களை வெளிப்படுத்தப் போகிறோம், ஏன் வெளிப்படுத்தப் போகிறோம்? என்ற கேள்விகளுடன் உரையாடல்களுடன் களப்பயிற்சி ஆரம்பமாயிற்று', 'கிராமமக்களே பிரதான இலக்காக இருந்ததன் காரணமாக மக்கள் மத்தியில் புழக்கத்தில் உள்ள ஆடல், பாடல், விளையாட்டுக்கள், படிமங்களாக உரையாடல்கள் தயாரானது. உரையாடல்களின் பின்பு அவர்களுக்கு விரும்பிய விதமாக அவர்களது சிந்தனைகளை உணர்வுகளை கற்பனைகளை வெளிப்படுத்துமாறு வேண்டப்பட்டது', 'கவிதையாக, பாடலாக, பழமொழியாக, உரையாடலாக, கதையாக, காட்சிப்படிமங்களாகும் விடயங்கள் அவர்களிடமிருந்து வந்தன. அப்படைப்புக்கள்

பற்றிய உரையாடல்கள் நிகழ்ந்தன. அதன் ஊடாக வீதி நாடக எழுத்துருக்களுக்கான விடயங்கள் குழுநிலையில் தொகுக்கப்பட்டன' (பெண்,2000:82-83) 'பெண்களும் மனிதர்கள் என்றுணர...' எனும் நாடக உருவாக்கத்திற்கான களப்பயிற்சியின் ஏற்பாட்டாளராக இயங்கிய ஆசிரியையின் கூற்று பின்வருமாறு காணப்படுகின்றது 'நாடகம் எனும்போது காலம் காலமாக ஒரு எழுத்துரு (Script) கொண்டுவரப்பட்டு அதற்குப் பாத்திரம் தெரிவு செய்யப்பட்டு, கொண்டு வருபவரின் கருத்து திணிக்கப்பட்டு நாடகம் மேற்கிளம்புவது வழமை. ஆனால் இங்கு மறுதலையாக மாணவர்கடாகவே கதை உருவாக்கப்பட்டு நாடகம் வளர்ந்து சென்றது முக்கியமான அம்சமாகும் (கௌரீஸ்வரன்.து, விவேகானந்தராஜா.த,2007:16-17). குறித்த நாடகக் களப்பயிற்சியில் பங்குபற்றிய மாணவர்களின் கீழ்வரும் குறிப்புக்கள் நாடகவாக்கத்தில் பங்குபற்றுனர்களின் பங்களிப்பை எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது. 'நாங்களே நாடகக்கரு ஆசிரியர்களாகவும், கதையாசிரியர்களாகவும், பாடலாசிரியர்களாகவும், இசையமைப்பாளர்களாகவும் திகழ்ந்திருக்கிறோம் என்றால் நீங்கள் நம்புவீர்களா? ஆனால் அதுதான் உண்மை. இத்தகைய திறமைகள் எவ்வாறு எங்களுக்குள் ஊற்றெடுத்தது என்பதனையெண்ண மனம் பிரமிப்பில் ஆழ்கிறது. எங்களுக்குத் தரப்பட்ட கருக்களில் ஒரு விடயத்தை நாங்களே தீர்மானித்து தலைப்பும் இட்டோம். அதுதான் பெண்களும் மனிதர்கள் என்றுணர...' (கௌரீஸ்வரன்.து, விவேகானந்தராஜா.த, 2007:20)

இவ்வாறாக களப்பயிற்சியினூடாக உருவாக்கம்பெற்ற நாடகங்கள் தனியொரு படைப்பாளரை பிரதானப்படுத்தும் ஆக்கமாகவன்றி பங்குபற்றுனர்களின் கூட்டுப்படைப்பாக்கமாகவே உருவாகியுள்ளன என்பதை இது எமது படைப்பு எட்டு நாடகங்களின் தொகுப்பாளர் பின்வருமாறு பதிவு செய்துள்ளார் 'ஓவியரின் கையில் வர்ணங்கள் போல, நெறியாளரின் கையில் நடிகர்களாக இல்லாமல், சகலரது பங்களிப்புடனும் ஆக்கப்பட்டவை. பயிற்சிப் பட்டறைகளில் வட்டமாக அமர்ந்து பகிரப்பட்ட விடயங்கள், எமக்குள் பொங்கிப் பொங்கி அடங்கிக் கொண்டிருந்த உணர்வுகள் அளிக்கை வடிவம் பெற்றன' (இது எமது படைப்பு, 2001: பக் i)

இலகுபடுத்துனரின் வகிபாகம்

மேற்படி களப்பயிற்சியூடாக நாடக ஆற்றுகையினையும் நாடக எழுத்துப்பனுவல்களையும் உருவாக்கிக் கொள்ளும் செயற்பாட்டில் இலகுபடுத்துனரின் முக்கியத்துவமும் வகிபாகமும் மேற்கிளம்புவதனைக் காணமுடிகின்றது. அதாவது நாடகக் களப்பயிற்சியைத் திட்டமிட்டு நடத்தி அதனூடாக நாடக ஆற்றுகையினையும் நாடகப் பனுவலாக்கத்தையும் நிறைவு செய்யும் வளதாரியாக இவர் அடையாளங் காணப்படுகின்றார். களப்பயிற்சியில் பங்குபற்றுனர்களிடையே தனது கருத்துக்களைத்

திணிப்பவராகவன்றி பங்குபற்றுனர்களின் படைப்பாக்க வல்லமையினை இனங்கண்டு அதனை விருத்தி செய்து அவர்களின் படைப்பாக்கத் திறன்களை அவர்களுக்கு உணரச்செய்து அவர்களின் படைப்பாக்கங்களாகக் காத்திரமான ஆக்கத்தை வெளிக்கொண்டு வருவதற்கான ஓர் இலகுபடுத்துனராக இவர் களப்பயிற்சியில் வகிபாகமேற்றுச் செயலாற்றுவார். இத்தகைய படைப்பாளுமை மிகுந்த இலகுபடுத்துனர்களாலேயே மேற்படி நாடகவாக்கங்களை உருவாக்கிக்கொள்ள முடியும். இந்த இடத்தில் மேற்கூறிய பெரும்பாலான நாடகவாக்கங்களில் இலகுபடுத்துனராகச் செயலாற்றிய சி.ஜெயசங்கர் அவர்கள் கூறும் கருத்து கவனத்திற்குரியதாக இருக்கின்றது. 'முழுக்குழுவையும் கூட்டாக எழுத்துருவையாக்கும் படைப்பாக்க நிலைக்கு இட்டு வருவது உரையாடல்கள் ஊடாக அதனை வளர்த்துச் செல்வதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மேற்படி கூட்டுப்படைப்பாக்க நிலையைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்து விடாமல் தன்னை வைத்துக்கொண்டு கூட்டுப்படைப்பாக்கச் செயல்முறை தடங்கல்களை சிக்கல்களை தேக்கங்களையடையும் போது அந்நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு உந்திவிடும் வழிமுறைகளை கையாள்பவராக இருப்பது சவாலானதும் சந்தோசமானதுமான பணியாகும். பல மூளைகள் கூட்டுப் படைப்பாக்க நிலையில் இயங்குகையில் தோற்றம் பெறும் விடயங்கள் ஆச்சரியம் ஊட்டுபவையாக நம்பிக்கையூட்டுபவையாக இருக்கும்'(பெண்,2000:84)

முடிவுரை

இவ்விதமாக மட்டக்களப்பின் நாடக அரங்க வரலாற்றில் 1996களிலிருந்து களப்பயிற்சிகளினூடாக நாடகங்களை உருவாக்கிக் கொள்ளும் செல்நெறி வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதை விளங்கிக்கொள்ளும் அதேவேளை இதில் ஆற்றுகை உருவாக்கம் நிறைவடையும் போது நாடக எழுத்துருவாக்கமும் நிறைவடையும் வகையில் பெரும்பாலான நாடகங்கள் உருவாக்கம் பெற்றுள்ளன என்பதை விளங்கிக்கொள்ள முடிகின்றது. இச்செல்நெறியில் மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மூன்றாவது கண் உள்ர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழு என்பவை காத்திரமாகச் செயற்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்த முடிகின்றது. இதில் இலகுபடுத்துனர்களாக ஈழத்தைச் சேர்ந்த சி.ஜெயசங்கர் அவர்களும், தமிழகத்தைச் சேர்ந்த மங்கை அவர்களும் செயலாற்றியுள்ளார்கள் என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இச்செல்நெறியில் சி.ஜெயசங்கர் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றமையினை அவதானிக்க முடிகிறது. இவ்வரங்கச் செல் நெறியானது மிகப்பெரும்பாலும் பெண்ணிலைவாத நடவடிக்கைகளை மையப்படுத்தியதாகக் காணப்படுவதையும் மத்தியதர வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்கள் மட்டுமன்றி சமூகங்களின் பல்வேறு மட்டங்களிலிருந்தும் நவீன கலை இலக்கியச் செயற்பாட்டாளர்களும்

கலைஞர்களும் விசேடமாகப் பெண் ஆளுமைகள் முகிழ்ப்பதற்கான வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. அத்துடன் ஈழத்துத்தமிழ் நாடக வரலாற்றில் களப்பயிற்சி அரங்கு புதியதோர் செல்நெறி என்பதும், இதன் முன்னோடியாக குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் திகழ்ந்துள்ளார் என்பதும் இதனை இன்னுமொரு பரிமாணத்திற்கு இட்டுச் சென்றவராக க.சிதம்பரநாதன் விளங்குகின்றார் என்பதும் இப்புதிய அரங்கச்செல்நெறி யாழ் குடாநாட்டில் தோற்றம் பெற்று மட்டக்களப்பில் புதிய பரிமாணங்களைப் பெற்றிருப்பதையும் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. சிதம்பரநாதன்,க., (1994), சமூக மாற்றத்துக்கான அரங்கு, முதல்பதிப்பு 1994, இரண்டாம் பதிப்பு 1995, தேசிய கலை இலக்கியப்பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, ப 11
2. சண்முகலிங்கம்குழந்தை,ம.(2003), நாடகவழக்கு - அரங்கக் கட்டுரைகளும் நேர்காணல்களும், முதல்பதிப்பு, இணுவில் கலை இலக்கிய வட்டம், ப ix
3. ஜெயசங்கர்,சி.,(2006) சண்ணரது கல்வியியல் அரங்கு, முதல் பதிப்பு, மூன்றாவதுகண் பதிப்பு, மட்டக்களப்பு, ப 30
4. இது எமது படைப்பு, (2001), எட்டு நாடகங்களின் தொகுப்பு, முதற்பதிப்பு, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு, பக் i,ii
5. பெண், (2000) தொகுதி 5, இல 4, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு, ப 74